4th March 1969]

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: முன்பே சொன்னேன். பொதுப்பணி அமைசசர் அவர்கள் அந்த 'மனோரா' வைப் பார்த்திருப்பார்கள். அந்த சாலை அமைக்கப்படும்போது அதைக் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்

Mr. CHAIRMAN : Questions 116 to 120 deal with the Highways Road Inspector. We will take them all together.

Highways Road Inspectors.

* 116 *Q.*—Thiru D. SANTOSHAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there are more than one thousand Highways Road Inspectors in the State who have put in more than five years' service and yet have not been made permanent; and

(*b*) if so, whether steps will be taken to make permanent all such Highways Road Inspectors?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: *(அ) மொத்தமாக உள்ள 2,532 சாலை ஆய்வாளர் பதவிகளில் 1,767 பதவிகள் மாநிலப் பணியின்கீழ் கொண்டு வரப்பட்டன. எஞ்சிய 765 பதவிகள் மாநிலப்பணியின் கீழ் கொண்டுவரப்படவில்லை.*

(இ) 1,767 மாநிலப்பணிப் பதவிகளில் 1,042 பதவிகள் நிலைப் படுத்தப்பட்டு விட்டன. எஞ்சியுள்ள 725 பதவிகள் தாற்காலிக பதவிகளாகவே நீடித்து வரப்படுகின்றன. சாலை ஆய்வாளர் ஒருவர் 22½ மைல் கொண்ட சாலையாவது பார்வையிடவேண்டும் என்னும் வரையறைக்குட்பட்டு மாநிலப்பணியின் கீழ் கொண்டு வரப்படாது எஞ்சியுள்ள சாலை ஆய்வாளர்களின் பணியினை மாநிலப் பணித்தரத்தின் கீழ்கொண்டு வருவதை ஆலோசிக்கும் போது தற்காலிகப் பதவிகளையும் நிலைப்பணியாக்குவது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

* 117 *Q.*—Thiru D. SANTOSHAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Highways Road Inspectors are now being paid out of the works estimate and not as in the case of other subordinate services; and

(*b*) if so, whether there is any proposal to bring them on a par with other Engineering Subordinate Services in the matter of payment?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: *(அ) சாலை ஆய்வாளர்களின் ஊதியம் அவர்கள் பணிக்கணக்கிற்கேற்ப வழங்கப் படுகிறது.*

(இ) முறையாகச் செயல்படும் பணி போன்று பொது சார்நிலைப் பணியின்கீழ் கொண்டு வரும் செயற்குறிப்பு எதுமில்லை.